www.ecourtsindia.com



DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் சாட்சியாகிய வினோபா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திரு.வெங்கட்ராமன், Gr-III, Bench Clerk, என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வினோபா | வயது | 37 |
| த/பெ | சுப்பிரமணி | இனம் | ஆண் |
| கிராமம் | | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| சமயம் | | தாலுக்கா | |

**CC.No.188/2019**

**( 1, 4, 5, 7, 10, 11 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 2, 3, 6, 8, 9, 12 டு 15 எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்)**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை 13.02.2023**
**அ.சா.6**

1. நான் எஸ்என்ஒய் நிறுவனத்தில் வேலை செய்கிறேனா என்றால் இல்லை. நான் அந்த நிறுவனத்தில் உள்ள சிசிடிவி கேமராக்களை பராமரிப்பு வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். என்னை எந்த தேதி சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுக்க கேட்டார்கள் என்றால் 4.9.2018ம் தேதி கேட்டார்கள்.

2. காட்சி பதிவிறக்கம் செய்வதற்காகதான் என்னை வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். காட்சி பதிவுகளில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் நான் காட்சி பதிவுகளை பார்த்தேன். காட்சி பதிவுகளை பார்த்தபோது யாரோ ஒருவர் வந்து பிரேக்கர் இருந்த பக்கம் சென்றது பதிவாகியிருந்தது.

3. நான் காட்சி பதிவிறக்கம் செய்து யாரிடம் வழங்கினேன் என்றால் எச்ஆர் மேலாளரிடம் வழங்கினேன். நான் காட்சி பதிவிறக்கம் செய்த கணினி எஸ்என் ஒய் நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் சிடி அல்லது பென்டிரைவில் காப்பி

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-8.pdf

செய்தேனா என்றால் பென்டிரைவில் காப்பி செய்தேன். பென்டிரைவ் யாருடையது என்றால் கம்பெனியில் கொடுத்தார்கள். பென்டிரைவ் எந்த நிறுவனத்தை சேர்ந்தது என்றால் சேன்டிஸ்க் நிறுவனத்தை சேர்ந்தது. அதன் கொள்ளலவு எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. எவ்வளவு கொள்ளலவு உள்ள பதிவை காப்பி செய்து கொடுத்தேன் என்றால் 20எம்பிக்குள் இருக்கும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் போலீசார்கேட்டுதான் நான் சிடியில் காப்பி செய்து கொடுத்தேன். எந்த தேதியில் போலீசார் கேட்டார்கள் என்றால் 5.9.2018ம் தேதி கேட்டார்கள்.

4. நான் நிர்வாகம் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் எஸ்என்ஒய் நிறுவனத்தில் சிசிடிவி பராமரிப்பு வேலை செய்து வருவதால் நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிறுவனத்தின் பெயர் என்றால் ஐகனெக்ட் டெக்னாலஜி. எஸ்என்ஒய் கம்பெனியில் நான் பதிவிறக்கம் செய்த கணினியில் எனக்கு அனுமதி கடவு சொல் உள்ளதா என்றால் உள்ளது. நான் எந்த கணினியில் இருந்து கணினியின் அடையாள குறியீட்டை குறிப்பிட்டு பதிவிறக்கம் செய்ததாக எழுத்து மூலமாக போலீசாரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை.

மறு விசாரணை ;இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/-K.Ramkumar
Judicial Magistrate,
Sriperumbudur.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNKP1C0017482019-orderno-8.pdf

www.ecourtsindia.com